# பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை எதிர்ப்பதற்கான சட்டத் திருத்தம்

பகுதி IV

## திராவகத் தாக்கல் (ஆசிட் வீச்சு)

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

*நவம்பர் 2020*

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) சுயாதீனமான, பக்கச்-சார்பற்ற அமைப்பாகும். இது ஆட்சி மற்றும் மோதல் தீர்வு பற்றிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துகின்றது. பொதுக்கொள்கை தொடர்பான விவாதங்களைப் பலப்படுத்துவதற்கு சிவில் சமுதாயங்களின் முக்கிய பங்களிப்பு அவசியமாயுள்ளது என்ற திடமான நம்பிக்கையுடன் மா.கொ.நி 1996 இல் உருவாக்கப்பட்டது. பொதுக் கொள்கை விமர்சிக்கப்படுகின்ற, மாற்றுக் கொள்கைகள் அடையாளப்படுத்தப்பட்டு பகிரப்படுகின்ற ஆய்வு மற்றும் ஆதரித்து வாதாடுதல் நிகழ்ச்சித்திட்டங்களைச் செய்வதற்கு மா.கொ.நி உடன்பட்டுள்ளது.

இல.6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு- 5, இலங்கை

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

தொலைநகல்: +9411 2081388

வலைத்தளம்: www.cpalanka.org

மின்னஞ்சல்: info@cpalanka.org

முகப்புத்தகம்: www.facebook.com/cpasl

டுவிட்டர்: @cpasl

# ஏற்றங்கீகரிப்புக்கள்

இவ் அறிக்கையானது குஷ்மிலா ரணசிங்க அவர்களின் உதவியுடன் கியாதி விக்கிரமநாயக்கவினால் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் வரைவுகளுக்கான கருத்துக் குறிப்புக்கள் கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து, பவானி பொன்சேகா மற்றும் சார்யா சமரக்கோனினால் வழங்கப்பட்டது. இவ் அறிக்கையானது பசன் ஜயசிங்கவினால் செம்மைப்படுத்தப்பட்டதுடன் அயுத்யா கஜநாயக்கவினால் ஒருங்கமைக்கப்பட்டது.

# பொருளடக்கம்

ஏற்றங்கீகரிப்புக்கள் .......... 2

பொருளடக்கம் .......... 3

அறிமுகம் .......... 4

ஆசிட் வீச்சு என்றால் என்ன? .......... 4

ஆசிட் வீச்சு செயலின் பாரதூரத்தன்மை .......... 5

திராவகத் தாக்குதல்களுக்கான பொதுவான நோக்கங்கள் .......... 8

ஆசீட் தாக்குதல் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடியதா? .......... 9

சர்வதேச சட்டப் பதிலிறுப்புக்கள் .......... 11

திராவகத் தாக்குதல் தொடர்பான சட்ட மற்றும் கொள்கைத் திருத்தத்திற்கான விதந்துரைகள் .......... 16

சட்டத் திருத்தங்கள் .......... 16

கொள்கைத் திருத்தங்கள் .......... 18

# அறிமுகம்

இலங்கையில் திராவகத் தாக்குதல்கள் அல்லது ஆசிட் வீச்சுக்களுடன் (Acide attack) தொடர்புடைய சட்டத் திருத்தத்திற்கான பகுதிகளை இவ் அறிக்கை ஆராய்கின்றது. சட்டம் மற்றும் கொள்கை எவ்வாறு ஆசீட் வீச்சுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாளலாம் என்பதனை அடையாளப்படுத்துகின்ற அறிக்கையாக இது அமைந்துள்ள அதேவேளை இது முழுமையான ஆய்வறிக்கையொன்றல்ல. ஆசீட் வீச்சினைக் கையாள்வதற்கான சட்டத் திருத்தங்களுக்கான விதந்துரைகளையும் அச்சட்டத் திருத்தங்களை வெற்றியாக்குவதற்கு அவசியமான கொள்கைசார் விதந்துரைகளையும் இவ்வறிக்கை முன்வைக்கின்றது.

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினை எதிர்ப்பதற்கான சட்டத்திருத்தங்களுக்கான விதந்துரைகளை வழங்குகின்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒரு தொகுதி ஆய்வுகளில் இது IV ஆவது பகுதியாக அமைந்துள்ளது. பகுதி I ஆனது திருத்தம் அவசியமாகின்ற நடைமுறையிலுள்ள சட்டங்களையும், இப்பகுதியில் சட்டத் திருத்தங்கள் மந்தமடைவதற்கான காரணங்களையும் ஆராய்ந்துள்ளது. பகுதி II மற்றும் III ஆகியன முறையே நிகழ்நிலை பாலியல் வன்முறை மற்றும் பெண் பிறப்புறுப்பு சிதைப்பு ஆகியவற்றை குற்றமாக்குவதற்கான குறிப்பான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை ஆராய்கின்றன.

## *ஆசிட் வீச்சு என்றால் என்ன?*

திராவகத் தாக்குதல் அல்லது ஆசிட் வீச்சு என்பன “பாரதூரமாக ஊனப்படுத்தல், உருக்குலைத்தல், சித்திரவதை செய்தல் அல்லது கொல்லுதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் நபரொருவர் மீது ஆசிட்டினை அல்லது அரிக்கின்ற இராசாயணப் பொருளொன்றினை ஊற்றுவதனை, வீசுவதனை அல்லது பாவிப்பதனை உள்ளடக்குகின்ற முன்திட்டமிடப்பட்ட தாக்குதல் வடிவமாகும்.”[1] இது பல சமூகங்களில் காணப்படுகின்ற ஒரு விடயமாகும், ஆனால் வரலாற்றுரீதியாக இதனைத் தடுப்பதற்கான மற்றும் குற்றவாளிகளை பொறுப்பாக்குவதற்கான நடவடிக்கைகளை சிறியளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எண்ணிக்கை பிராந்தியத்திற்கு பிராந்தியம் வேறுபடுகின்றபோது, ஆசீட் வீச்சானது உலகளாவியரீதியில் பெண்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கின்றது என்பதுடன்[2] இது ஒரு பால்நிலை அடிப்படையிலான வன்முறையாகக் கருதப்படுகின்றது.[3] அதனால் ஏற்படுத்தப்படுகின்ற ஊறின் பாரதூரத்தன்மை மற்றும் அதற்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் என்பனவற்றால் அதனைத்

[1] Cambodian Acid Survivors Charity, ‘Breaking the Silence - Addressing acid attacks in Cambodia’, May 2010, available at https://web.archive.org/web/20131219010314/http://www.cambodianacidsurvivorscharity.org/docs/breaking_the_silence.pdf

[2] Bipasha Baruah and Aisha Siddika, ‘Acid attacks are on the rise and toxic masculinity is the cause’, *The Conversation*, August 14, 2017, available at https://theconversation.com/acid-attacks-are-on-the-rise-and-toxic-masculinity-is-the-cause-82115

[3] United Nations Commission on Human Rights Resolution 2003/45, April 23, 2003, p. 2, available at http://ap.ohchr.org/documents/E/CHR/resolutions/E-CN_4-RES-2003-45.doc

தடுப்பதற்கு கடினமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை உருவாக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

ஆசீட் வீச்சு சம்பவங்கள் இலங்கையில் அடிக்கடி பதிவாகின்றன. 2020 ஜனவரி 11 அன்று கேகாலையில் இடம்பெற்ற முரண்பாடொன்றினைத் தொடர்ந்து எட்டு பேர் ஆசிட் வீச்சினால் தாக்கப்பட்டனர் என்பதுடன் அவர்களுள் இருவர் பார்வையை இழந்துள்ளனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.[4] 2019 ஜூலை 8 அன்று கலேலியவில் பெண்ணொருவர் ஆசிட் வீசித் தாக்கப்பட்டார் என்பதுடன் பாரதூரமானக் காயங்களுக்கும் உள்ளானார்; அத்தாக்குதலுக்கான காரணமாக பாதிக்கப்பட்டவர் ஈடுபட்டிருந்த காதல் தொடர்பொன்றாகும் என அறிக்கையிடப்பட்டது.[5] 2019 ஜூலை 7 அன்று கடபொலவில் பெண்ணொருவரும் அவரது மகளும் ஆசீட் தாக்குதலினால் பாதிக்கப்பட்டனர்; தாக்குதலுக்கு பின்னர் தற்கொலை செய்துக் கொண்ட குற்றவாளி 'உறவுப் பிரச்சினையொன்றினால்' இதனைச் செய்வதற்கு தூண்டப்பட்டதாக சான்றுரீதியாக அறிக்கையிடப்பட்டது.[6] 2019 ஜூன் 6 அன்று பயகலவில் வசித்து வந்த ஆணொருவர் ஆசிட் தாக்குதலின் காரணமாக உயிரிழந்தார் என்பதுடன் அவருடைய மனைவியும் வீட்டுப் பணிப்பெண்ணும் சந்தேக நபர்களாகக் காணப்பட்டனர்.[7] 2019 பெப்ரவரி 14, ரத்கெகுலவ பகுதியில் பெண்ணொருவரும் அவரது மகளும் உறங்கிக் கொண்டிருந்தபோது ஆசிட் தாக்குதலுக்குள்ளாகினர் என்பதுடன் தாய் தாக்குதலினால் உயிரிழந்தார். அண்மையில் தன்னுடைய தாயை விட்டுப்பிரிந்த தனது தந்தை இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாக மகள் வாக்குமூலம் அளித்திருந்தார்.[8] ஆசீட் வீச்சு நடத்தப்பட்ட இச்சம்பவங்களுள் பல பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான உதாரணங்களாகும்.

## ஆசிட் வீச்சு செயலின் பாரதூரத்தன்மை

பல சந்தர்ப்பங்களில் ஆசீட் வீச்சு உயிரிழப்பினை ஏற்படுத்துவதில்லை அல்லது உயிரிழப்பினை ஏற்படுத்த எண்ணுவதில்லை என்றபோதிலும், அது பாரதூரமான இயலாமையினை ஏற்படுத்தும் என்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கு வாழ்நாள் முழுதும் உடல்ரீதியான, உளரீதியான மற்றும் சமூக பாதிப்பினை ஏற்படுத்தும்.[9] உடல்ரீதியாக, அது நீடித்த வலியினையும் பாரதூரமான உருக்குலைவினையும் விளைவுகளாக்கும். ஏனெனில், திராவகத் தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்படுகின்ற அமில வகைகள் (உதாரணமாக சல்பூரிக் அமிலம்) தோலையும் சில சமயங்களில் எலும்புகளையும் உருகச் செய்யக் கூடியன. இவ்

[4] 'Eight hospitalized over acid attack in Kegalle', *Newsfirst.lk*, 12th January 2020, available at https://www.newsfirst.lk/2020/01/12/eight-hospitalized-over-acid-attack-in-kegalle/

[5] 'Mistress of bakery owner the victim of acid attack', *Daily Mirror*, 8th July 2019, available at http://www.dailymirror.lk/print/front_page/Mistress-of-bakery-owner-the-victim-of-acid-attack/238-170666

[6] 'Man consumes acid after throwing it at woman and two children', *Republic Next*, 8th July 2019, available at https://www.republicnext.com/politics/man-consumes-acid-after-throwing-it-at-woman-and-two-children/

[7] Retired lady teacher allegedly kills husband', *Daily Mirror,* 6th June 2019, available at https://www.pressreader.com/sri-lanka/daily-mirror-sri-lanka/20190606/281818580326962

[8] 'Woman dies, daughter injured in acid attack while asleep', *Ada Derana,* 15th February 2019, available at http://www.adaderana.lk/news/53263/woman-dies-daughter-injured-in-acid-attack-while-asleep

[9] Solotaroff, Jennifer L., and Rohini Prabha Pande, 'Violence against Women and Girls: Lessons from South Asia', *South Asia Development Forum*, Washington, DC: World Bank, 2014, p. 56, available at https://openknowledge.worldbank.org/bitstream/handle/10986/20153/9781464801716.pdf?sequence=1&isAllow ed=y

எரிகாயங்களும் வடுக்களும் பாதிக்கப்பட்டவரை அடையாளம் காணமுடியாதபடிக்கு மாற்றி விடுகின்றன என்பதுடன் அவை வாழ்நாள் முழுதும் நீடித்து நிற்கக்கூடியன.[10] ஆசிட் தாக்குதல்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்களின் முகத்தினையே இலக்கு வைக்கின்றன. இது பார்வையிழப்பினை ஏற்படுத்தலாம் என்பதுடன் அது உதடுகள் அல்லது நாசித்துளைகள் எரிவதற்கும், சில சமயங்களில் அவை மூடப்படுவதற்கும் காரணமாய் அமைகின்றன. இது பாதிக்கப்பட்டவர் தொடர்பாடல்களைச் செய்வதனைக் கடினமாக்குகின்றது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், ஆசிட் தாக்குதல்கள் பாதிக்கப்பட்டவரின் நடமாட்டத்தினையும் மட்டுப் படுத்தலாம்.[11] அத்திராவக ஆவியினை உள்ளிழுத்தல் பாரதூரமான மூச்சுப் பிரச்சினைகளையும் அதேபோல ஏனைய உள் காயங்களையும் ஏற்படுத்தும்.[12]

உளவியல்ரீதியானத் தாக்கங்கள் பேரழிவினை ஏற்படுத்தக்கூடியன, பாதிக்கப்பட்டவர்கள் உளப்பிணிக்கு ஆளாவதுடன், மோசமான சில சந்தர்ப்பங்களில் தற்கொலையும் செய்துக் கொள்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பின்-அதிர்ச்சி அழுத்தங்கள், மன அழுத்தம், தூக்கமின்மை மற்றும் உலகத்தினை எதிர்கொள்வதற்கான அச்சம் போன்றவற்றிற்கும் ஆளாகின்றனர்.[13] சமூகப் பாதிப்புக்களைப் பார்க்கின்றபோது, பாதிக்கப்பட்டவர்கள் மனவேதனை காரணமாக தனியாக ஒதுங்கிக் கொள்வார்கள் என்பதுடன் கல்வியினைப் பெற்றுக் கொள்ள முடியாமை அல்லது தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியாமை போன்ற எதிர்மறையான சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை எதிர்நோக்கக்கூடும்.[14] அவர்களுடைய உருமாறியத் தோற்றத்தின் காரணமாக் ஓரங்கட்டப்படுதல் மற்றும் கலாசாரக் களங்கம் என்பவற்றுடனும் அவர்கள் போராட வேண்டியேற்படுகின்றது.[15]

2006 இல், பண்டார எதிர் சட்டமா அதிபர் எனும் ஆசிட் வீச்சு தொடர்பான வழக்கொன்றினை உச்சநீதிமன்றம் தீர்க்க வேண்டியிருந்தது.[16] அவ்வழக்கில், ஆசிட் தாக்குதலுக்கு உள்ளான பெண் தாக்குதல் இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் காயங்களினால் உயிரிழந்திருந்தார் என்பதுடன் அவருக்கு அருகிலிருந்த இரண்டு இளம் பிள்ளைகளும் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். மேல் நீதிமன்றம் குற்றவாளிக்கு கொலைக்கானத் தண்டனை வழங்கியிருந்தது, எவ்வாறெனினும், பிரதிவாதித் தரப்பு உச்சநீதிமன்றத்திற்கான தங்களுடைய மேன்முறையீட்டில் உடல் காயத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தாக்குதல் செய்ததாகவும், கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கவில்லையென்றும் அதனால் அதிகளவு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டது. உச்சநீதிமன்றமானது கொலைக்கான தண்டனையேயே உறுதிப்படுத்திய அதேவேளை, ஆசிட்வீச்சு செய்யப்படுகின்ற நோக்கத்தின் தன்மை தொடர்பான கேள்விகளை எழுப்பியது.

---

10 'Encyclopedia of Domestic Violence and Abuse: Volume 1', Edited by Laura L. Finley, *ABC-CILO LLC*, 2013, p. 4.
11 Human Rights Watch, 'What hell feels like: Acid Violence in Cambodia', February 4, 2019, available at https://www.hrw.org/report/2019/02/04/what-hell-feels/acid-violence-cambodia
12 Ibid, 'Encyclopedia of Domestic Violence and Abuse', page 4
13 Ibid, Solotaroff, Jennifer L., and Rohini Prabha Pande, 'Violence against Women and Girls: Lessons from South Asia'
14 Ibid
15 Ibid, Human Rights Watch, 'What hell feels like: Acid Violence in Cambodia'.
16 *Bandara v. Attorney General* [2006] 2 Sri LR 1

வேறு வடிவங்களிலான ஊறு அல்லது பாரதூரமான உடல் ஊறினைப் போலல்லாது, இன்னுமொரு நபரை ஆசிட் இனால் தாக்குகின்ற முடிவினை எடுக்கின்றபோது, பாதிக்கப்பட்டவர் வாழ்நாள் முழுதும் அனுபவிக்க வேண்டிய பாரதூரமான மன வேதனையினை மற்றும் அதன் விளைவுகளின் பாரிய அளவினையும் குற்றவாளி அறிந்திருப்பார்.[17] இது குற்றத்தினை புரிகின்றபோது குற்றவாளிக்கு இருக்கின்ற ஆழமான தீயயெண்ணத்தை எடுத்துக்காட்டுகின்றது. அச்செயலின் உண்மையான விளைவுகள் அதனை வேறு குற்றங்களிலிருந்து வேறுபட்டதாக்குகின்றது. இதன் பாதிப்பு பேரழிவினை ஏற்படுத்தக் கூடும் என்பதுடன் வாழ்நாள் முழுதும் நீடித்ததாக இருக்கும், இது பாதிக்கப்பட்டவர் அதன் பிறகு சாதாரண வாழ்க்கையொன்றினை வாழ்வதனைத் தடுக்கும். பாதிக்கப்பட்டவர்கள் அந்நிலையிலிருந்து மீண்டு வருவதற்கு நீண்டகாலம் மற்றும் பெரும்பாலும் பணம் அதிகமாக செலவாகின்ற விசேட சிகிச்சை செயன்முறைகள், சரியான சத்திரசிகிச்சை மற்றும் உளவள ஆலோசனை என்பவை தேவைப்படுகின்றன.[18] இவை 'உடலூறினை ஏற்படுத்தல்' என்றவாறாக வகைப்படுத்தப்படுகின்றபோது இப்பாரதூரமான விளைவுகள் அற்பமானதாகக் கருதப்படுகின்றன, ஏனெனில், இதனால் வரும் பாதிப்பானது பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கையினை மாற்றக்கூடியது என்பதுடன் அதனால் ஏற்படும் சேதம் நிரந்தரமானது.

ஹைதரோகுளோரிக், சல்பூரிக் மற்றும் நைத்திரிக் அமிலங்களே பெரும்பாலும் திராவகத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.[19] ஏனைய குற்றப்பாங்கான ஆயுதங்களைப் போலல்லாது, ஆசிட்டினைப் பெற்றுக் கொள்வது இலகுவாக உள்ளது என்பதுடன் அது வர்த்தக அல்லது கைத்தொழில் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பதார்த்தங்களில் மற்றும் சிலநேரங்களில் வீட்டில் சுத்தப்படுத்தும் பதார்த்தங்களில் கூட காணப்படுகின்றது.[20]

துப்பாக்கி போன்ற ஆயுதங்களை அணுகுதல் பொதுவாகக் கடினமானதாகவும் குறிப்பிட்ட தலையீடுகளுக்கு உட்பட்டதாகவும் உள்ள அதேவேளை, ஆசிட் மிக இலகுவாக அணுகப்படக் கூடியதாக உள்ளது என்பதுடன் அது பாதிக்கப்பட்டவர் மீது சமமான அல்லது அதிகமான பேரழிவினை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. எவ்வாறெனினும், ஆயுதமொன்றாகப் பாவிக்கப்படக்கூடிய ஆசிட்டின் ஆற்றல் பெரும்பாலும் உணரப்படுவதில்லை. சில நாடுகள் ஆசிட்டின் விற்பனையினை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அதேவேளை, இலங்கையில் அதனை அணுகுவது இலகுவானதாகவே உள்ளது. திராவகத் தாக்குதலுடன் தொடர்புடைய சட்டத்தினைத் திருத்துகின்றபோது, குற்றத்தினைத் தண்டிப்பதனைக் கையாள்வது மாத்திரமல்ல ஆனால் குறிப்பிட்ட நிகழ்வு நடப்பதற்கு முன்னர் பிரச்சினையைக் கையாள்வதற்காக இத்தகையத் தாக்குதல்களில் பயன்படுத்தப்படுகின்ற ஆசிட்டின் விற்பனை தொடர்பில் ஒழுங்கமைப்புக்களை ஆக்குதலும் முக்கியமானதாகும்.

---

[17] For example, see the story of Sanjaya Sandaruwan – 'Acid attack victim wants a new lease of life', *Daily Mirror,* 3rd March 2020, available at http://www.dailymirror.lk/print/news-features/Acid-attack-victim-wants-new-lease-of-life/131-184186

[18] Acid Survivors Trust International, 'A worldwide problem', available at https://www.asti.org.uk/a-worldwide-problem.html

[19] Avon Global Center for Women and Justice at Cornell Law School and the New York City Bar Association, 'Combatting acid violence in Bangladesh, India and Cambodia', 2011, p. 12, available at https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=1861218

[20] Ibid, p. 12

திராவகத் தாக்குதல், பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் அறிந்திருக்கின்ற நபர்களாலேயே நடத்தப்படுகின்றது.[21] இது திராவகத் தாக்குதல் சம்பவங்களை அறிக்கையிடுவதில் தயக்கத்தினை அல்லது பழிவாங்கப்படுவோம் என்ற அச்சத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்குதல் ஆகியவற்றினை விளைவுகளாக்குகின்றது.[22]

## திராவகத் தாக்குதல்களுக்கான பொதுவான நோக்கங்கள்

திராவகத் தாக்குதலுக்கான பொதுவான நோக்கங்கள் நாடுகளுக்கிடையில் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன என்பதுடன் அத்தகையத் தாக்குதல்களினால் யார் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர் என்பது தொடர்பான புள்ளிவிபரங்களும் வேறுபடுகின்றன. ஐக்கிய இராச்சியத்தில் திராவகத் தாக்குதல் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுவதுடன் அதற்கான பொதுவான காரணம் குழு வன்முறை என்பதுடன் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் ஆண்களாக உள்ளனர்.[23] தெற்காசியாவில், எவ்வாறெனினும், திராவகத் தாக்குதல்களினால் பாதிக்கப்படுகின்ற பெரும்பாலானவர்கள் பெண்களாகவும் பெண் பிள்ளைகளாகவும் உள்ளனர்.[24]

பங்களாதேஷ், இந்தியா மற்றும் கம்போடியா தொடர்பாக செய்யப்பட்ட ஒரு ஆய்வில், இரண்டு தென்னாசிய நாடுகளில் திராவகத் தாக்குதலுக்கான பிரதான நோக்கங்களாக திருமணக் கோரிக்கைகளை நிராகரித்தல் அல்லது ஆண்களால் செய்யப்படுகின்ற சலுகைகளை மறுத்தல், சீதனத்துடன் தொடர்புடைய முரண்பாடுகள், காணி முரண்பாடுகள் மற்றும் திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் தொடர்பிலான பொறாமை என்பன அமைந்துள்ளன.[25] நடத்தையினை விட பெண்களின் உடல்தோற்றத்திற்கு மதிப்பளிக்கப்படுகின்ற தந்தைவழிச் சமூகங்களில் பெண்ணின் உடல் தோற்றத்தினை உருக்குலைத்தலானது ஆணொருவருக்கு அல்லது சமுதாயத்திற்கு அகௌரவத்தினை ஏற்படுத்தியமை என்ற எண்ணப்படுகின்ற குற்றத்திற்கான தண்டனையாக அமைகின்றது. ஒரு பெண்ணை அடைய முடியாத ஆண் அதற்கு பின் அவளை யாரும் ஏற்கக்கூடாது என்ற எண்ணத்துடன் அவளுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்த எண்ணுகின்றான்.

பிராந்தியத்திலுள்ள வேறு நாடுகளைப் போல இலங்கையில் ஆசிட் தாக்குதல்கள் அடிக்கடி நிகழாத போதும், அத்தகையத் தாக்குதல்களின் விளைவுகளின் பாரதூரம் அதனைக் கையாள்வதற்கான சட்ட மற்றும் கொள்கை திருத்தங்களை ஆக்குவதனைத் தேவைப்படுத்துகின்றது.

---

[21] Ibid, p. 2

[22] Ibid, Human Rights Watch, 'What hell feels like: Acid Violence in Cambodia'.

[23] NPR, 'Acid Attacks on the rise in the UK', August 6, 2017, available at: https://www.npr.org/sections/parallels/2017/08/06/541209398/acid-attacks-on-the-rise-in-the-u-k

[24] Grace Yi, 'Acid Attacks in South Asia', *Yale Global Heath Review*, October 15, 2015. Available at https://yaleglobalhealthreview.com/2015/10/15/acid-attacks-in-south-asia/

[25] Ibid, Avon Global Center for Women and Justice at Cornell Law School and the New York City Bar Association, 'Combatting acid violence in Bangladesh, India and Cambodia',

## ஆசீட் தாக்குதல் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடியதா?

திராவகத் தாக்குதலைச் சூழ்ந்துள்ள விசேட சந்தர்ப்பங்களினால், அது நியதிச்சட்டப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய தனியான குற்றமொன்றாகின்றது. எவ்வாறெனினும், திராவகத் தாக்குதல்கள் இடம்பெறுவதனைக் கையாள்வதற்கான சட்டங்கள் அச்சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் குற்றவாளிகளைத் தண்டிப்பதாக மாத்திரம் அமையக்கூடாது, மாறாக, அத்தகையத் தாக்குதல்களில் பயன்படுத்தப்படுகின்ற இரசாயணப் பொருட்களின் விற்பனை அல்லது கிடைக்கக்கூடியத் தன்மையினை ஒழுங்குபடுத்தும் வகையிலும் அவை திருத்தப்பட வேண்டும். ஆசிட் தாக்குதல்கள் இடம்பெறுவதனை எதிர்க்கும் பொருட்டு பல நாடுகள் (இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம்) இவ்விரண்டு வழிகளிலுமே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இக்கொடூரமான வன்முறை இடம்பெறுவதனை வெற்றிகரமாகத் தடுக்கும் பொருட்டு, ஆசிட்டினை சட்டமுரணாக உற்பத்தி செய்பவர்களைத் தண்டிக்க வேண்டிய சட்டங்களைக் கொண்டுவருதலும் இன்றியமையாததாகும்.

இலங்கையில் திராவகத் தாக்குதலைக் கையாள்வதற்கான குறிப்பான சட்டங்கள் இல்லை என்பதுடன் காயங்களின் பாரதூரத்தன்மை மற்றும் குறித்த வழக்கின் சந்தர்ப்பங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு, குற்றவாளி ஆபத்தான ஆயுதங்கள் அல்லது வழிகளினால் வேண்டுமென்றே ஊறு ஏற்படுத்தியமைக்காக,[26] ஆபத்தான ஆயுதங்கள் அல்லது வழிகளினால் வேண்டுமென்றே பாரதூரமான ஊறு ஏற்படுத்தியமைக்காக,[27] அல்லது கொலை[28] அல்லது கொலை முயற்சிக்காக[29] குற்றஞ்சாட்டப்படலாம். முதல் இரண்டு பிரிவுகளிலுமுள்ள ‘ஆபத்தான ஆயுதங்கள் மற்றும் வழிகள்’ என்பன எரியூட்டுகின்ற இரசாயணப் பொருட்களையும் உள்ளடக்குகின்றன என்பதனால் ஆசிட் தாக்குதல்களை அவற்றின் பரப்பிற்குள் கொண்டு வருகின்றன.

நஞ்சுகள், அபின் மற்றும் ஆபத்தான ஔடதங்கள் கட்டளைச்சட்டத்தின்படி,[30] ‘நஞ்சுகள்’ மற்றும் ‘நச்சுத்தன்மையுடைய பதார்த்தங்களாக’ வகைப்படுத்தப்பட்டுள்ள சில பொருட்களின் விற்பனை இலங்கை சட்டத்தின்கீழ் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் அட்டவணை 1 ஆனது வேறுபட்ட வகைகளிலான நஞ்சுகள் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த பதார்த்தங்களை பட்டியற்படுத்துகின்றது என்பதுடன் இவை தனியான வகைப்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் அதன் விற்பனைத் தொடர்பாக ஏற்பாகின்ற மட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிகளைக் கொண்டுள்ளது. உலகளாவியரீதியில் பொதுவாக ஆசீட் தாக்குதல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற சல்பூரிக் அமிலம் மற்றும் ஹைதரோகுளோரிக் அமிலம் என்பன நச்சுத்தன்மை வாய்ந்த பதார்த்தங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன[31] என்பதுடன் அவை ‘நஞ்சு’

[26] தண்டனைக்கோவை, பிரிவு 315
[27] தண்டனைக்கோவை, பிரிவு 317
[28] தண்டனைக்கோவை, பிரிவு 294
[29] தண்டனைக்கோவை, பிரிவு 300
[30] Available at http://www.nddcb.gov.lk/Docs/acts/25345.pdf
[31] முதலாம் அட்டவணை, பகுதி IV

என சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மும்மொழிகளிலும் அடையாளப்படுத்தப்பட்ட கொள்தாங்கிகளில் வைத்து மாத்திரமே விற்கப்பட முடியுமென்பதுடன் வாங்குபவரின் பெயர் மற்றும் விலாசம் என்பனவும் அக்கொள்தாங்கியில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். விசேடமாக இப்பதார்த்தங்கள் ஏற்படுத்துகின்ற ஆபத்தின் ஆழத்தினை கருத்திற்கொண்டு பார்க்கின்றபோது, இம்மட்டுப்பாடுகள் குறைந்தளவிலானவை.

இலங்கை திறத்தவ நாடொன்றாக உள்ள சட்டவிரோத போதை மருந்து கடத்தலுக்கு எதிரான மற்றும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயம் (1988), மற்றும் போதை மருந்து மற்றும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் தொடர்பான சார்க் சமவாயம் (1990) ஆகிய சமவாயங்களின் கீழுள்ள கடப்பாடுகளுடன் இணங்கிக் கொள்ளும்பொருட்டு, 2018 இல், 2008 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க, சட்டவிரோத போதை மருந்து கடத்தலுக்கு எதிரான மற்றும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் பொருட்கள் தொடர்பான சமவாங்கள் சட்டம்[32] இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் நோக்கம் போதைப்பொருட்களின் கடத்தலை கையாள்வதாயினும், அது ஹைட்ரோகுளோரிக் மற்றும் சல்பூரிக் அமிலம் உள்ளடங்கலாக குறிப்பிட்ட பதார்த்தங்கள் இறக்குமதி செய்யப்படுவதில் சில குறிப்பிட்ட மட்டுப்பாடுகளை விதித்தது.

இச்சட்டமானது முன்னறிவிப்பு அதிகார சபையொன்றினை ஸ்தாபிக்கின்றது[33]. ஹைட்ரோகுளோரிக் மற்றும் சல்பூரிக் அமிலம் உள்ளடங்கலாக குறிப்பிட்ட பதார்த்தங்கள் இறக்குமதி செய்யப்படுவதற்கு இச்சபையின் அனுமதிப்பத்திரம் தேவைப்படுத்தப்படுகின்றது.[34] அத்தகைய இறக்குமதி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின்[35] கீழும் அனுமதிப் பத்திரமொன்றைத் தேவைப்படுத்துகின்றது. இதன்கீழ் அத்தகைய பதார்த்தங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, பாவனை, உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிப்பு தொடர்பாக காலாண்டுக்கொருமுறை அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுகின்றது.[36] மேலும், ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பரிமாற்றங்கள் அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட வேண்டும்[37] என்பதுடன் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் பதிவுகள் பேணப்பட வேண்டும்.[38] இது மிக ஆபத்தான இரண்டு அமிலங்களின் இறக்குமதி மற்றும் பகிரந்தளிப்பு தொடர்பில் குறிப்பிடத்தக்க ஒழுங்குவதிகளை விதிக்கின்ற அதேவேளை, இவ் ஒழுங்குவிதிகள் முழுவதுமாய் வேறொரு நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவனவாகும், ஆகவே அவை திராவகத் தாக்குதல்கள் இடம்பெறுவதனைத் தடுப்பதற்கு போதுமானவை அல்ல.

---

[32] Available at https://www.lawnet.gov.lk/wp-content/uploads/2016/12/CONVENTIONS-AGAINST-ILLICIT-TRAFFIC-IN-NARCOTIC-DRUGS-AND-PSYCHOTROPIC-SUBSTANCES-ACT-NO-1-OF-200.pdf

[33] பிரிவு 18

[34] பிரிவு 19(a)

[35] பிரிவு 20(1)

[36] பிரிவு 19(e)

[37] பிரிவு 19(f)

[38] பிரிவு 19(g)

அத்துடன் ஆசிட் தாக்குதலுக்கான துலங்கல்களை எவ்வாறு செய்வது என்பது தொடர்பாக பொது மக்களிடையே மட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வே காணப்படுகின்றது. நபரொருவர் மீது ஆசிட் வீசப்படுகின்ற அந்நொடியில் மாற்றமுடியாத சேதங்கள் ஏற்பட்டு விடுகின்றன, ஆனால் உடனடியாக எரியூட்டுகின்ற பதார்த்தத்தினை தண்ணீரால் கழுவுதல் சேதத்தின் அளவைக் குறைப்பதற்கு உதவும். ஏனெனில், ஆசிட் முழுமையாக கழுவி அகற்றப்படுகின்ற வரையில் ஆசிட் தொடர்ச்சியாக எரியூட்டும்.[39] ஆசிட் இன் தொடுகை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து மக்கள் வழிப்புடன் இருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தல் ஆசிட் தாக்குதல்களினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களைக் குறைப்பதற்கு உதவும்.

தாக்குதலின் பௌதீக செயலுக்கு அப்பால் செல்கின்றபோது, விசேடமாக, பாதிக்கப் பட்டவர்கள் தங்களுடைய காயங்களைத் தொடர்ந்து மீண்டும் சமூகத்தில் மீளிணையமுடியாத சந்தர்ப்பங்களில், உறுதியான அவதானத்தினைத் தேவைப்படுத்துகின்ற ஒரு காரணி பாதிக்கப்பட்டவருக்கான நட்ட ஈடாகும். அச்சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மற்றும் சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுவதற்கான செலவுகளைத் தாங்கிக் கொள்ள வேண்டிய அதேவேளை, அவர்கள் பிறரில் தங்கி வாழ்பவர்களாகின்றனர். அவர்களுடைய ஆரோக்கியம், சமூக மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்கு முழுமையான முறையில் பதிலிறுக்கின்ற கொள்கைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

## சர்வதேச சட்டப் பதிலிறுப்புக்கள்

பெண்களின் முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாடுகள் பிரிவினால் பெண்களுக்கெதிரான வன்முறையினைத் தடுப்பதற்கான சட்டவாக்கம் தொடர்பான கையேட்டிற்கு 2011 இல் கொண்டு வரப்பட்ட இணைப்பானது பால்நிலை அடிப்படையிலான வன்முறையினைத் தடுப்பதனை இலக்காகக் கொண்ட சட்டவாக்கத்திற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.[40] கையேட்டிலுள்ள குற்றங்களுக்கு மத்தியில், *'ஆசிட் இனைப் பயன்படுத்துகின்ற தாக்குதலினால் செய்யப்படுகின்ற வன்முறைச் செயல்'* என வரையறுக்கப்படுகின்ற 'ஆசிட் தாக்குதல்களும்' ஒன்றாகின்றது. குற்றம் செய்யப்படுகின்ற நோக்கத்திற்கு பதிலாக குற்றத்தின் வகையினை (அதாவது, ஆசிட் இன் பாவனை) முன்னிலைப்படுத்தி அக்குற்றத்திற்கு பரந்தளவான வரைவிலக்கணம் வழங்கப்பட வேண்டுமென இவ் இணைப்பு விதந்துரைக்கின்றது.[41] இதற்கான காரணம் யாதெனில், பல நோக்கங்களுக்காக ஆசிட் தாக்குதல்கள் புரியப்படுகின்றன என்பதுடன் அவை அனைத்தும் ஒரு பிரிவிற்குள் உள்ளடக்கப்பட வேண்டும். மேலும், அது உண்மையானத் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ள

[39] Human Rights Law Network 'Burning Injustice: A rights advocacy manual for Lawyers, Activists & Survivors on Acid Violence in India', edited by Kerry McBroom and Salina Wilson, *Socio Legal Information Centre: Delhi*, 2014, p. 16. Available at https://www.slideshare.net/nbhartiya/burning-injustice-a-book-on-acid-attack-by-hrln

[40] United Nations, 'Supplement to the Handbook for Legislation on Violence Against Women; "Harmful Practices" Against Women', 2011, available at https://www.un.org/womenwatch/daw/vaw/handbook/Supplement-to-Handbook-English.pdf

[41] Ibid.

நபர்களைத் தண்டிப்பதற்கு மேலதிகமாக, சட்டமுரணாக ஆசிட் இனைத் தயாரிப்பவர்களும் தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும் என விதந்துரைக்கப்படுகின்றது.[42]

அதனைப்போன்று, பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கின்ற சமவாயத்தின் (CEDAW) கீழான குழுவானது *2017* இல் பெண்களுக்கு ஊறினை ஏற்படுத்துகின்ற ஆசிட் மற்றும் ஏனைய பதார்த்தங்களின் அணுகுதலைக் கட்டுப்படுத்தல் போன்ற பாதுகாப்பான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான அரசின் கடப்பாடுகளை அடிக்கோடிட்டுக் கூறியுள்ளது.[43]

பாலியல் வன்புணர்விற்கெதிரான சட்டம் என அறியப்படுகின்ற இந்தியக் குற்றவியல் (திருத்தச்) சட்டம் *2013*, பல பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான குற்றங்கள் தொடர்பான திருத்தங்களைக் கொண்டு வந்திருந்ததுடன் அது 'ஆசிட் இன் பாவனையினால் வேண்டுமென்றே பாரதூரமான ஊறு விளைவித்தல்' என்பதனையும் குறிப்பான குற்றமொன்றாகக் கொண்டு வந்தது.[44]

> *நபரொருவருக்கு நிரந்தர அல்லது பகுதியளவான சேதத்தினை அல்லது உருக்குலைவினை ஏற்படுத்துகின்ற அல்லது உடலின் பாகமொன்றினை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பாகங்களை எரிக்கின்ற அல்லது அங்கவீனமாக்குகின்ற அல்லது உருக்குலைக்கின்ற அல்லது இயலாமல் போகச் செய்கின்ற அல்லது நபரொருவர் மீது ஆசிட் இனை வீசுவதனால் அல்லது பயன்படுத்துவதால் பாரதூரமான ஊறினை ஏற்படுத்துகின்ற அல்லது அவருக்கு அத்தகைய ஊறு அல்லது காயம் ஏற்படும் என்ற எண்ணத்துடனும் அறிவுடனும் வேறு ஏதேனும் வழியொன்றினூடாக பாரதூரமான ஊறினை ஏற்படுத்துகின்ற நபரொருவர் பத்து வருடங்களுக்கு குறையாத ஆனால் வாழ்நாள் முழுவதற்குமாய் நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.*
>
> *எவ்வாறெனினும், தண்டப்பணமானது பாதிக்கப்பட்டவர் தன்னுடைய சிகிச்சையினைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நியாயமான அளவில் வழங்கப்படுதல் வேண்டும்.*
>
> *இந்தப்பிரிவின் கீழ் விதிக்கப்படுகின்ற எந்தவொரு தண்டப்பணமும் பாதிக்கப்பட்டவருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.*

இந்தப்பிரிவின் கீழ், ஆசிட் இன் பாவனையினால் நபரொருவருக்கு பாரதூரமான ஊறினை ஏற்படுத்தலானது கடினமான தண்டனையொன்றினை விளைவாக்குகின்றது, குறைந்தளவான தண்டனையே பத்து வருடங்கள் என்பதுடன் அது ஆயுள் தண்டனையாகவும் மாற்றப்படலாம்.

---

[42] Ibid, p 23.

[43] Committee on the Elimination of Discrimination against Women, General Recommendation No. 35, 26th July 2017, (CEDAW/C/GC/35) available at https://tbinternet.ohchr.org/_layouts/15/treatybodyexternal/Download.aspx?symbolno=CEDAW/C/GC/35&Lang=en

[44] பிரிவு *326* A

மேலும், பாதிக்கப்பட்டவர் செலவழிக்க வேண்டியேற்படுகின்ற மருத்துவ செலவுகளுக்கான பணம் தண்டப் பணத்தின் அளவில் செல்வாக்கு செலுத்தும்.

ஆசிட் இன் பாவனையினால் பாரதூரமான ஊறினை ஏற்படுத்தலை குற்றமொன்றாக்குவதற்கு மேலதிகமாக, இத்திருத்தமானது 'வேண்டுமென்றே ஆசிட்டினை வீசுதல் அல்லது வீசுவதற்கு எத்தனித்தலையும்' குற்றமொன்றாக்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில், ஊறு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆசிட் இனை வீசுகின்றபோது அல்லது ஆசிட் இனைப் பாவிப்பதற்கு முயற்சிக்கின்றபோது, அதனால் உண்மையில் எவ்வித உடற் காயங்களும் ஏற்படாதபோதிலும், அது தண்டனைக்குரிய குற்றமாகும். இக்குற்றமானது குறைந்தபட்சத் தண்டனையாக ஐந்து வருட சிறைதண்டனையினைக் குறிப்பிடுகின்றது என்பதுடன் இது பத்து வருடங்கள் வரையில் நீட்டிக்கப்படலாம். இது ஆசிட் தாக்குதல்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான உறுதியான சட்டவாக்க எண்ணத்தினை பிரதிபலிக்கின்றது.

மேலும், இந்தியாவின் இயலாமைகளை உடையோருக்கான உரிமைகள் சட்டத்திற்கான 2016 ஆம் ஆண்டு திருத்தமானது[45] ஆசிட் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களையும் உள்ளடக்குகின்ற வகையில் உடல் இயலாமை என்பதன் பரப்பெல்லையினை விரிவுபடுத்தியதுடன் அவர்களுக்கு கல்வி மற்றும் தொழிலில் விசேட ஒதுக்கீடுகளை அறிமுகம் செய்தது.[46] எவ்வாறெனினும், குற்றவியல் நீதி முறைமையின் வெற்றியானது நியதிச்சட்ட புத்தகங்களில் உள்ள சட்டங்களுக்கு அப்பாலும் தங்கியுள்ளது என்பதுடன் இத்தகைய சட்டங்கள் இருந்தபோதிலும், உலகில் ஆசிட் தாக்குதல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற நாடுகளுள் ஒன்றாக இந்தியா இன்னமும் இருந்து வருகின்றது.[47]

ஆசிட் இன் விற்பனையினை பல நியாயாதிக்கங்கள் ஒழுங்குபடுத்துகின்றன. இந்தியாவில் உச்சநீதிமன்றம், *Luxmi vs. Union of India*[48] என்ற வழக்கில் அளித்த ஆணையினைத் தொடர்ந்து இவ் ஒழுங்குவிதிகள் நாடளாவியரீதியில் அமுலுக்கு வந்தன. இது ஆசிட் தாக்குதலினால் பாதிக்கப்பட்டு வடுக்களுடன் வாழ்கின்ற ஒரு இளம் பெண்ணால் பதிவு செய்யப்பட்ட பிரசித்தமான பொது நல வழக்கொன்றாகும். இவ் எழுத்தாணை விண்ணப்பத்தினூடாக, ஆசிட் வன்முறையினை எதிர்ப்பதற்கு அவசியமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆக்கும்படி அரசாங்கத்தினைப் பணிக்குமாறு *Luxmi* நீதிமன்றத்திடம் கேட்டிருந்தார். நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட கட்டளைகளுக்கு மத்தியில், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் ஆள்புல ஒன்றியங்களில் ஆசிட் இன் உடைமை மற்றும் விற்பனையினைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளைக் கொண்டுவருமாறு செய்யப் பட்ட பணிப்பும் உள்ளடங்கியிருந்தது. அத்தகைய ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு

---

[45] Available at http://legislative.gov.in/sites/default/files/A2016-49_1.pdf

[46] Sujoy Dhar, 'Acid attacks against women in India on the rise; survivors fight back', *USA Today*, 27th July 2017, available at https://www.usatoday.com/story/news/world/2017/07/27/acid-attacks-women-india-survivors-fight-back/486007001/

[47] Poorvi Gupta, India Is Failing Acid Attack Survivors, Here Is The Data, *Shethepeople*, 16th January 2020, available at https://www.shethepeople.tv/top-stories/issues/india-acid-attacks-survivors-data

[48] Available at https://indiankanoon.org/doc/90443079/

கொண்டுவரப்படும் வரையில், இடைக்காலத்தில் மாநிலங்கள் மற்றும் ஆள்புல ஒன்றியங்கள் பின்பற்ற வேண்டிய குறிப்பான வழிகாட்டல்களையும் குறிப்பிட்டிருந்தது:

*"(i) பணம் செலுத்துமிடத்தில் ஆசிட் யாருக்கு விற்கப்படுகின்றது (ன) மற்றும் விற்கப்பட்ட அளவு போன்ற தகவல்களை உள்ளடக்கி ஆசிட் விற்பனை செய்வதனைப் பதிவதற்கான ஒரு பதிவேட்டினை விற்பனையாளர் பேணாதவரையில் ஆசிட் விற்பனை முழுமையாகத் தடை செய்யப்பட்டதாகும். அப்பதிவேடானது ஆசிட் விறகப்பட்ட நபரின் விலாசத்தினையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.*

*(ii) வாங்குபவர் பின்வருவனவற்றைக் காட்டிய பின்னரே அனைத்து விற்பனையாளர்களும் ஆசிட் இனை விற்க முடியும்:*

*அ) அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டை, இது குறிப்பிட்ட நபரின் விலாசத்தினையும் உள்ளடக்கியிருக்கும்*

*ஆ) ஆசிட் இனை வாங்குவதற்கான காரணங்கள் அல்லது நோக்கங்களைக் குறிப்பிடுதல்.*

*(iii) விற்பனையாளர் ஆசிட் இன் சரக்கிருப்பினை 15 நாட்களுக்குள் பொருத்தமான உப பிரிவு நீதவானிடம் பிரகடனப்படுத்துதல் வேண்டும்.*

*(iv) பதினெட்டு வயதிற்கு கீழ்பட்ட எந்தவொரு நபருக்கும் எவ்விதமான ஆசிட்டும் விற்கப்படக் கூடாது.*

*(v) பிரகடனப்படுத்தப்படாத ஆசிட் சரக்கிருப்பு காணப்படின், பொருத்தமான உப பிரிவு நீதவான் அச்சரக்கிருப்பினைப் பறிமுதல் செய்ய முடியும் என்பதுடன் 50,000 வரையில் பொருத்தமான தண்டப்பணத்தினை அவ்விற்பனையாளர் தொடர்பில் விதிக்கவும் முடியும்.*

*(vi) பொருத்தமான உப பிரிவு நீதவான் மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களை மீறுகின்ற எந்தவொரு நபர்மீதும் 50,000 வரையிலான தண்டப்பணத்தினை விதிக்கலாம்."*

மேலும், குறிப்பிட்ட அதே ஆணையில் இந்தியாவின் உச்சநீதிமன்றமானது கல்வி நிறுவனங்கள், ஆய்வுக் கூடங்கள், வைத்தியசாலைகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் பொதுத் துறைத் திணைக்களங்கள் என ஆசிட்டினை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் நிறுவனங்களுக்கும் வழிகாட்டல்களை வழங்கியிருந்தது.

எவ்வாறெனினும், இம்முயற்சிகள் காணப்பட்டபோதிலும் இவ்வழிகாட்டல்கள் அதிகார சபைகளினால் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையினால் இந்தியாவில் ஆசிட்டின் உடைமை மற்றும் விற்பனை மீதான ஒழுங்குபடுத்தல் வினைத்திறனற்றதாகவே காணப்படுகின்றது. ஆசிட் இந்தியாவில் இலகுவில் கிடைக்கக்கூடியதொன்றாகின்றது.[49] இலங்கையில், பொதுவாக திராவகத் தாக்குதல் குறைவாக இருப்பதனால், ஆசிட்டின் விற்பனை தொடர்பாக ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான விருப்பமின்மையே காணப்படும்.

ஐக்கிய இராச்சியத்தில் ஆசிட் விற்பனை தொடர்பிலான மட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. அண்மைக் காலப்பகுதியில் திராவகத் தாக்குதல்கள் அதிகரித்தமையினால் அத்தகைய சில மட்டுப்பாடுகள் நஞ்சுகள் சட்டத்திற்கான திருத்தங்களினூடாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன.[50] இச்சட்டமானது சில பதார்த்தங்களை ஒழுங்குபடுத்தப்பட்ட பதார்த்தங்களாகவும் ஏனையவற்றை அறிக்கையிடத்தகு பதார்த்தங்களாகவும் பட்டியற் படுத்துகின்றது.[51] ஒழுங்குபடுத்தப்பட்ட பதார்த்தங்களின் விற்பனை தீவிரமாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. உள்துறை அலுவகத்திடமிருந்தான அனுமதிப்பத்திரமின்றி பொது மக்களுள் ஒருவர் அதனைக் கொள்வனவு செய்ய முடியாது.[52] அறிக்கையிடத்தகு பதார்த்தங்களின் விற்பனையானது குறைந்தளவான கடினத்தன்மையுடன் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது, அவற்றை வாங்கலாம், ஆனால் குறிப்பிட்ட பரிமாற்றம் சந்தேகத்திற்குரியதாக இருப்பின் அல்லது அத்தகைய பதார்த்தங்கள் திருடப்பட்டிருப்பின், அதனை அறிக்கையிட வேண்டுமென விற்பனையாளர்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.[53]

ஐக்கிய இராச்சியத்தில், குற்றப்பாங்கான ஆயுதங்கள் சட்டம் 2019 ஆனது ஆசிட் இன் விற்பனை மற்றும் உடைமை மீது கடினமான கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. சில வகையான ஆசிட்கள் எரியூட்டுகின்ற பதார்த்தங்களாக பட்டியலிடப்பட்டுள்ளன[54] என்பதுடன் அத்தகைய பதார்த்தங்கள் 18 வயதிற்கு கீழ்பட்ட நபர்களுக்கு விற்கப்பட முடியாது என்பதுடன் எந்தவொரு நபரும் அதனை பொது இடத்தில் வைத்திருக்கக் கூடாது. நாம் இந்தியாவில் அவதானித்ததைப் போன்று, இவையும் திராவகத் தாக்குதல்கள் இடம்பெறுவதனை எதிர்ப்பதற்கான தீவிரமான சட்டவாக்க எண்ணத்தினைப் பிரதிபலிக்கின்றன.

---

[49] Vageshwari Deswal, 'Acid Attacks – Need to regulate Acid Sales', *Times of India*, 6th January 2020, available at https://timesofindia.indiatimes.com/blogs/legally-speaking/acid-attacks-need-to-regulate-acid-sales/

[50] Available at: https://www.legislation.gov.uk/ukpga/1972/66

[51] United Kingdom Home Office, 'Home Office Guidance: Supplying explosives precursors and poisons, available at https://www.gov.uk/government/publications/supplying-explosives-precursors/supplying-explosives-precursors-and-poison

[52] Ibid.

[53] Ibid.

[54] Schedule 1, available at: https://www.legislation.gov.uk/ukpga/2019/17/contents/enacted/data.htm

# திராவகத் தாக்குதல் தொடர்பான சட்ட மற்றும் கொள்கைத் திருத்தத்திற்கான விதந்துரைகள்

மேலுள்ள கலந்துரையாடலைக் கருத்திற்கொண்டு, இலங்கையில் திராவகத் தாக்குதலை முழுமையாகக் கையாள்வதற்காக கீழ்வரும் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் பரிந்துரைக்கப் படுகின்றன. குற்றவியல் நீதி முறைமையில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கான ஒரு முழுமையானத் தொகுதி விதந்துரைகள் வழங்கப்பட்டுள்ள இவ்வாவணத் தொகுதியின் பகுதி *1*[55] உடன் சேர்த்து இது வாசிக்கப்படுதல் வேண்டும்.

## *சட்டத் திருத்தங்கள்*

**தண்டனைக் கோவைக்கான திருத்தமொன்றினூடாக திராவகத் தாக்குதல் தொடர்பாக புதிய குற்றமொன்றினை ஆக்குதல். அக்குற்றமானது:**

- *குற்றத்தினைப் புரிவதற்கு காரணமாய் இருந்த ஏதேனும் நோக்கத்தினை முன்னிலைப்படுத்துவதற்கு பதிலாக குற்றத்தின் முறை, அதாவது ஆசிட்டின் பாவனையினை முன்னிலைப்படுத்தல்.*
- *குற்றவாளி பாதிக்கப்பட்டவரை ஆசிட்டினால் என்ன செய்ய எண்ணியிருந்தார் என குறிப்பிடுதல், அது 'ஊனப்படுத்தல், உருக்குலைத்தல், சித்திரவதை செய்தல் அல்லது கொல்லுதல் வேண்டும் என்ற எண்ணத்துடன் அல்லது அவ்வாறு நடக்கும் என்ற அறிவுடன் ஆசிட்டினைப் பாவித்தல்" என்றவாறு அது குறிப்பிடப்படுதல் வேண்டும்.*
- *ஆசிட் தாக்குதல்கள் எப்போதும் ஆசிட்டினை பாதிக்கப்பட்டவர்மீது வீசுகின்ற வடிவத்தில் இடம்பெறுவதில்லை, ஆகவே, இக்குற்றமானது ஆசிட்டினைப் பயன்படுத்தி மற்றுமொரு நபருக்கு ஊறு விளைவிக்கின்ற எவ்வடிவிலான ஆசிட் தாக்குதலும் உள்ளடக்கப்படக்கூடிய வகையில் பரந்தளவாக இருத்தல் வேண்டும். இது 'வீசுதல், ஊற்றுதல் அல்லது வேறேதேனும் முறையில் பாவித்தல்' என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.*
- *பாதிக்கப்பட்டவர் அடைந்திருக்கும் காயங்களின் பாரதூரத்தன்மையினை பொருட்படுத்தாது குற்றவாளியின் செயல்களை தண்டனைக்குரியதாக்குதல். குற்றவாளி குற்றம் புரிந்தவராக்கப்படுவதற்கு பாதிக்கப்பட்டவர் நிரந்தரமான உருக்குலைவு அல்லது இயலாமையினைப் பெற்றிருக்க வேண்டுமென அவசியமில்லை.*

- *குறைந்தபட்ச தண்டனை மற்றும் மோசமான சூழ்நிலைகளுக்கான அதிகபட்சத் தண்டனைகளை உள்ளடக்குகின்ற தண்டனைகள் உள்ளடங்கலாக கடினமானத் தண்டனைகளை விதித்தல். இது பாதிக்கப்பட்டவர் அடைந்துள்ள காயங்களின் பாரதூரத்தன்மை அல்லது காயங்களின் அளவு அல்லது குற்றவாளியினால் பாவிக்கப்பட்ட ஆசிட்டின் வகை என்பன உள்ளடக்கப்படலாம்.*

[55] Legal Reform to Combat Sexual and Gender-Based Violence - PART I - Reforming Existing Laws and Policies, Centre for Policy Alternatives, November 2020

- பாதிக்கப்பட்டவருக்கு எவ்வித காயங்களும் ஏற்படாத சந்தர்ப்பங்களிலும், ஆசிட்டினை வீசுகின்றமை, ஊற்றுகின்றமை அல்லது ஆசிட்டினைப் பாவிக்கின்றமையினை குற்றமாக்குதல்.

- திராவகத் தாக்குதலினால் ஏற்பட்டுள்ள ஊறிற்கு விகிதசமமான நட்டஈட்டினைப் பாதிக்கப்பட்டவருக்கு வழங்குதல்.

- திராவகத் தாக்குதலுக்கு உதவுகின்றமையினை குற்றமொன்றாக்குதல் (ஐக்கிய இராச்சிய சட்டத்தினைப் போன்று)

- ஊறிற்கான உடனடி ஆபத்து இருக்குமாயின், எரியூட்டுகின்ற பதார்த்தங்களின் பாவனை தொடர்பான அச்சுறுத்தலினைக் குற்றமொன்றாக்குதல்.

**ஆசிட் மற்றும் ஏனைய எரியூட்டுகின்ற பதார்த்தங்களின் விற்பனை மற்றும் பாவனையினை ஒழுங்குபடுத்தும் வகையில் நஞ்சுகள், அபின் மற்றும் ஆபத்தான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தினை பின்வரும் வழிகளினூடாகத் திருத்துதல்:**

- ஆசிட் விற்பனைக்கு அனுமதிப் பத்திரமளிக்கின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்தல் மற்றும் நாடு முழுவதும் இடம்பெறுகின்ற விற்பனையினைப் பதிவு செய்வதற்கான பதிவேடுகளைப் பேணுமாறு விற்பனையாளர்களைத் தேவைப்படுத்தல்.
- சில்லறை சந்தையில் கிடைக்கக்கூடியதாக உள்ள மற்றும் வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்ற ஆசிட் இன் வீரியத்தன்மையினைக் குறைத்தல்.
- வியாபர நிறுவனங்கள் எரியூட்டுகின்ற பதார்த்தங்களின் சரக்கிருப்பு தொடர்பாக குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகார சபைக்கு காலத்திற்குக்காலம் பிரகடனம் செய்தல் மற்றும் திருட்டினைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- வீட்டுச் சூழல் பகுதிகளுக்கு செய்யப்படுகின்ற அதிகாரமளிக்கப்படாத எரியூட்டுகின்ற பதார்த்தங்களின் விநியோகம் தொடர்பாக குற்றமொன்றினை ஆக்குதல் (ஐக்கிய இராச்சிய சட்டத்திற்கு ஒத்ததாக)
- ஊறு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் பொது இடத்தில் எரியூட்டுகின்ற பதார்த்தமொன்றின் உடைமையினைக் கொண்டிருத்தல் தொடர்பாக குற்றமொன்றினை ஆக்குதல் (ஐக்கிய இராச்சிய சட்டத்திற்கு ஒத்ததாக)
- மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் மீறப்படுகின்றபோது அதனைக் கையாள்வதற்கானத் தண்டனைகள் மற்றும் தண்டப்பணங்களை அறிமுகப்படுத்தல்

## *கொள்கைத் திருத்தங்கள்*

- திராவகத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களைச் சூழ்ந்துள்ள களங்கத்தினைக் கையாள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

- ஆசிட் காயங்கள் ஏற்படும்போது நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய காயங்கள் ஏற்படுவதனைக் குறைத்துக் கொள்ளும்பொருட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பாடசாலை பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்குதல். இதனை ஆசிட் தாக்குதல்களின்போது செய்ய வேண்டியவை என குறிப்பாக அறிமுகப்படுத்தாதிருத்தல். ஏனெனில் அவ்வாறு அறிமுகப்படுத்துதல் அத்தகைய தாக்குதல்களை சாதாரணமானதாக்குகின்ற விளைவினை ஏற்படுத்தலாம், அவற்றை பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கல்வியின் பகுதியொன்றாக அறிமுகப்படுத்தல்.

- பொலிஸ், சுகாதார சேவை, உள்ளூர் அதிகார சபைகள் என்பன பொது ஆலோசனை மற்றும் பொது மக்களுக்கான வழிகாட்டல்களில் ஆசிட் தாக்குதல்கள் இடம்பெறின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் உள்ளடக்குதல்.
- சுகாதார பராமரிப்பு பணியாளர்கள், முதல் துலங்கலைச் செய்வோர் மற்றும் பொலிஸ் ஆகியோருக்கு ஊறினைக் குறைத்துக் கொள்ளும்பொருட்டு திராவகத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முதலுதவி குறித்து போதுமான பயிற்சிகளை வழங்குதல்.
- திராவகத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தல், இதனூடாக நட்டஈடானது, காயங்களின் பாரதூரத்தன்மை, மருத்துவ மற்றும் சட்ட செலவுகள், வருமான இழப்புக்கள் மற்றும் ஏனைய பொருத்தமான காரணிகளைக் கருத்திற்கொண்டு கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.
- திராவகத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைத் தமது சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பச் செய்யும் பொருட்டு அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.